உ
சிவமயம்

## விநாயகர் காப்பு

முன்னவனே யானை முகத்தவனே முக்திநலம்
சொன்னவனே தூய்மெய்ச் சுகந்தவனே – மன்னவனே
சிற்பரனே ஐங்கரனெ செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்தாள் சரண்!

## முருகன் வணக்கம்

குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையா-யென்று
மிளையா யழகியா யேறூர்ந்தா னேரே
யுளையாயென் னுள்ளத் துறை.

## சிவபெருமான்

கற்பனை கடந்த, சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறை சிரத்தின் மேலாம்
சிற்பர ஓமமாகி திருச்சிற் றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடனஞ் செய்கின்ற பூங்கழல்
போற்றி போற்றி.

-திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்

# சூரக்குடிக் கோயில் பெரிய சேக்கான் செட்டியார், சின்னச்சேக்கான் செட்டியார் வகையறாவின் செவ்வூர் சோணையன் கோயில் படைப்பு வீட்டு வரலாறு

## சுமார் 350 ஆண்டுகளுக்கு முன்பு

இராமநாதபுர மாவட்டம் சிவகெங்கைத் தேவஸ்தானம் பரியாமருதுபட்டி சேவுகப் பெருமாள் உட்கடையைச் சார்ந்தது நெற்குப்பை சோணையன் கோயில். இவ்வாலயம் நெற்குப்பை பொன்னமராவதி நெடுஞ்சாலையில், நெற்குப்பையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் சோலைகள் சூழ அமைந்திருக்கிறது. இக்கோயில் பகுதி முன்னர் ஓமக்காடு என்றே அழைக்கப்பெற்று வந்திருக்கிறது. இன்றும் இப்பகுதி மக்கள் அங்குள்ள, கண்மாயை 'ஓமக்கண்மாய்' என்றும், வயலை 'ஓமவயல்' என்றும், உழவர்களையும் இக்கோயில் பாதுகாவலர்களையும், பல்லவராய கூடத்தார் என்றும் கூறுகிறார்கள். எனவே ஆதி காலத்தில் ஓமக்காடாக இருந்த இப்பகுதியில் ஐயனார் கோயில் கொண்டிருப்பதால் ஓமக்காட்டு ஐயனார் என்று அழைக்கப்பட்டார். இக்கோயிலில் நின்ற திருக்கோலத்துடன் மேற்கு நோக்கியிருக்கும் இறைவனே **சோணையன்.**

இவ்வாலயம் ஐயனார் ஆலயமாக இருந்த போதிலும் அனைவரும் **'சோணையன் கோயில்'** என்றே அழைத்து வருகிறார்கள்.

மக்கள், உள்ளமெல்லாம் கோயில் கட்டி வாழ்த்திப் பணிந்து வணங்குகின்ற காரணத்தால் சோணையன் மண்டபமோ, கோபுரமோ தனக்கு எதுவும் வேண்டாமென மறுத்துவிட்டார். மணிமுத்தாற்றின் அணித்தே வட கரையில் வாழ்கின்ற சோணையன் வலிமையும் சக்தியும் வாய்ந்தவர். இவர் பெயரையே சொல்வதற்கும் மக்கள் அஞ்சுவர். குறிப்பாகப் பெண்கள் இப்பகுதியில் வருவதில்லை. பொதுவாகப் ழெயரை கூறாது தெய்வமெனக் கூறுவது மரபு.

பல ஆண்டுகட்கு முன்னர் ஒருநாள் செட்டியார் ஒருவர் கழுத்துரு பொன்நகைகளுடன் தனி வழி நடந்து வந்தார். சோணையன் கோயிலருகே வருஞ்சமயம் இருள் சூழ்ந்துவிட்டது. வழியில் ஆள் நடமாட்டம் இருப்பதறிந்து அச்சமும் கலக்கமும் கொண்டார். செட்டியார் பதறி நடுங்கி, வாய் குழறித்தடுமாறி,

''சோலைசூழ் சோணையா – சேராது என்னைக்
காப்பாய் ஐயா''

என உரத்த குரலில் இறைவனே அழைத்தார் எப்படியோ இறைவனை நினைத்தும் செட்டியாருக்கு எதிர்பாராத தைரியம் வந்துவிட்டது. ஆபத்தில் உதவும் அருந்தெய்வம் அருள்தரு சோணையன் மறுமொழியாக

''வந்தேன் ஐயா – துணை உனக்குத்
தந்தேன் ஐயா''

என உரத்த குரல் கொடுத்தார். செட்டியாரும் எவ்வித அச்சமும் இன்றி வீடு வந்து சேர்ந்தார் இவ்வண்ணம் அஞ்சலென்று காக்கும் அருள்வள்ளல் சோணையன் தெய்வத்தையும் ஓமக்காட்டு ஐயனாரையும் பழைய திருக்கோளக்குடி என்னும் புனிதத் தலத்தில் வாழ்ந்துவரும் சின்னச்சேக்கான் செட்டி பெரிய சேக்கான் செட்டி வகையறாவினர் வழி வழியாக வழிபட்டு வருபவர்கள்.

மேலே சொன்ன சேக்கான் செட்டியார் வீட்டில் ஆச்சியம்மன் என்ற பெண் ஒருத்தி வாழ்க்கைப்பட்டார்கள். நல்லறமாம் இல்லறத்தை ஏற்று நலமுடன் இனிது வாழ்ந்து வந்தார்கள். வாழக்கையின் பயனாய் நல்லொழுக்க மிக்க நன்மக்கள் தோன்றினர். அப்படியிருக்கும் காலத்தில் ஆச்சியம்மன் தாய்வீட்டிற்குச் சென்று தன் வீடாகிய புகுந்த வீட்டிற்குச் சோணையன் கோயில் வழியாகக் குழந்தையுடன் வருகிறார்கள் துணைக்குச் சகோதரர்களும் கைம்பெண் ஆச்சியும் உடன் வருகிறார்கள் சோணையன் கோயில் அருகில் வரும் சமயம் மழைப்பிடித்துக் கொண்டது. மழைக்காக ஆலயத்தினுள் ஒதுங்கினார்கள்.

மலையாளத்திலிருந்து பட்டாணி ஒருவன் தொட்டிச்சியைச் சிறையெடுத்துக் கூட்டிக்கொண்டு வந்தான். இதனை அறிந்த தொட்டிச்சியின் தகப்பனாரும் அவள் சகோதரர்களும் வைரவர் காவலுடன் அவர்களைத் தேடிவருகிறார்கள். ஓமக்காட்டு ஐயனார் ஆலயத்துக்கு அருகில் தொட்டிச்சி வரும் சமயம் இடி மின்னலுடன் கூடிய பெரும் மழைப்பிடித்துக்கொண்டது. பெருங்காற்றும் வீசியது. தொட்டிச்சி, பட்டாணி, ஆச்சியம்மன், கைம்பெண், உறவினர்கள் எல்லோரும் மழைக்காகச் சோணையன் கோயிலில் ஒன்றாக ஒதுங்கினார்கள். அங்கு அப்பொழுது அசந்தர்ப்பவசத்தினால் ஏற்பட்ட இடியின் விளைவால் அனைவரும், மனித வடிவு நீங்கித் தெய்வ வடிவை எய்தினார்.

இது நடந்து பல வருஷங்கள் கழிந்தன. பிறகு ஆச்சியம்மன் தான் வாழ்கைப்பட்ட (புகுந்த வீடு)பழைய திருக்கோளக்குடி சின்னச் சேக்கான் செட்டி பெரிய சேக்கான் செட்டி குடும்பத்தில் சிறிதும் பெரிதுமாகப் பல் சோதனைகளைக் காட்டியது. எனவே பழைய திருக்கோளக்குடி சூரக்குடிக் கோயில் நகரத்தார்கள் சோணையன் கோயில் படைப்பை ஏற்படுத்தி பெரிய சேக்கான் செட்டி வகைக்கு சாமியாடிச் செட்டி வீட்டு வகையில், குமரப்ப செட்டி ஆண்டியப்ப அய்யா அவர்களைப் பெரிய சாமியாடியாவவும், சின்னச் சேக்கான் செட்டி வகைக்கு – பூலாங்குறிச்சி பெரியணன் செட்டி வகையறாவை ஏற்பாடு செய்து சின்னச் சாமியாடியாகவும் பூசாரியும் ஏற்பாடுசெய்து சோணையன் கோயில் படைப்பை முறைப்படி தொடர்ந்து பல காலம் நடத்தி வந்தார்கள். இப்படியே ஆச்சியம்மனுக்கும் ஏனைய தெய்வங்கட்கும் படைப்புப் பெருகப் பெருக புள்ளிகளின் எண்ணிக்கையும் பெருகி வந்தது. நலமும் வளமும் பெற்று நாளும் வளர்ந்து நன்கு சீரும் சிறப்புமாகப் பழைய திருக்கோளக்குடியில் வாழ்ந்து வந்தனர்.

சோணையன் கோயிலில் ஆச்சியம்மன் படைப்பில் சேர்ந்த நகரத்தார்கள் வசதிக்காகவும், புள்ளிகள் பெருகியதனாலும் திருக்கோளக்குடியிலிருந்து படைப்புச் சாமான்களுடன் செவ்வூரிலுள்ள பழையூருக்கு வந்தார்கள்.

கொஞ்ச காலத்தில் பழைய திருக்கோளக்குடி மலையில் ஒருவகைப்பூ பூக்கத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து கொடூரமான காய்ச்சல் பரவத் தொடங்கியது அதனுல் அஞ்சி சோணையன் கோயில் படைப்பு வீட்டைச் சேர்ந்த

நகரத்தார்களும் பனையப்பட்டிக்கும் வேகுப்பட்டிக்கும் பூலாங்குறிச்சிக்கும் மிதிலைப்பட்டிக்கும் பரியாமருதுபட்டியிலிருந்து தற்சமயம் நெற்குப்பைக்கும் ஒற்றுமையுடன் பிரிந்து சென்று வாழ்ந்து வந்தார்கள்.

செவ்வூர் பழையூரில் தற்சமயம் உள்ள சொக்கநாத சுவாமி கோவிலுக்குச் சமீபத்தில் கூரையால் படைப்பு வீடு தனியே கட்டிப் படைத்து வந்தார்கள். அதில் பெரிய சேக்கான் செட்டி வகைக்கு செவ்வூர் ராமன் செட்டி ராமனாத அய்யா அவர்களைப் பெரிய சாமியாடியாகவும், சின்னச் சேக்கான் செட்டி வகைக்குச் செவ்வூர் குமரப்ப அய்யா மகன் கருப்பஞ் செட்டி அய்யாவைச் சின்னச் சாமியாடியாகவும், வேகுப்பட்டி ஆண்டியப்ப செட்டி பழனியப்ப அய்யாவைப் பூசாரியாகவும் பிறகு பனையப்பட்டி, பழனியப்ப செட்டி சுப்பிரமணிய அய்யாவைப் பூசாரியாகவும், வேகுப்பட்டி குமரப்ப அய்யா மகன் கருப்பாத்தான் மனைவி உமையாள் ஆச்சி ஆச்சியம்மனுக்குப் பானை வைத்துச் சிறப்பாக படைப்பு நடந்து வந்தது.

படைக்கின்ற கூரை வீடு அசந்தர்ப்பவசத்தால் அக்கினியால் சேதம் உண்டாகிப் பிறகு செவ்வூர் புதூரில் தற்சமயம் உள்ள சோணையன் கோயில் புதுப்படைப்பு வீட்டுக்கு விசுவாவசு சித்திரை மீ 19உ யன்று தச்சுச் செய்ய நாள் பார்த்து, தார்சு ஒட்டுக்கூடமாகக் ருத்ரோக்காரி ஆவணி மீ 16உ வெள்ளிக்கிழமை அவிட்ட நட்சத்திரத்தில் (கிரகப்பிரவேசம்) புதுமனை புகுவிழா செய்தும் படைப்பு நடத்தியும் இருக்கிறார்கள்.

**இதனைக் கீழ்காணும் பாடலாலும் அறியலாம்**

சித்திரமதாகவே ருத்ரோக்காரியில் சிங்கமாதந்
தன்னிலே
தேதி பதினாறிவே சுக்கிரவாரநாள் சிறந்திட
அவிட்டநாளில்
சத்திரபதி சேக்கப்பன் வணிகர் இவர் கிளைகளும்
தயவாகவே மனது கொண்டு
செவ்வூரினிற் சுவாமிவீடுஉண்டு பண்ணி
பக்தியோடு மாயாண்டி தொட்டிச்சி சோணையன்

பரிஉடைய ஆச்சி அம்மன்

பக்தரைக்காக்கும் கருப்பர் இவர்களுக்கெல்லாம்

படைத்து என்னாளும் வாழ்க

கரும்பு முக்கனி சர்க்கரை வேணுமென்ற

அமிர்தங்கள் எல்லாம்

வெகுபுனிதமாகவே வளரும் மென்மேலும்

உயரவர் ஓமக்காடைய்யனாரே

பெரிய சாமியாடியை – பூசாரியையும் வைத்து நகரத்தார்கள் பாட்டுப் படித்து வருந்திச் சுவாமி அழைப்பது பழக்கம் புள்ளிக்காரர்கள், படைப்பு வீட்டிலும் நன்மைகளுக்கும் ஏங்கல் தாங்கல்களுக்கும் பெரிய சாமியாடியைச் சுவாமி அழைத்துக் கேட்டு, சுவாமி வந்து சொல்லும் பரிகாரங்களைச் செய்து திருப்தியும் நன்மையும் அடைந்து கொண்டிருக்கிறார்கள். பெரிய சாமியாடிக்கு அருள்மிகுந்து சுவாமி வரும்போது..

**1. ஆத்தா (ஆச்சியம்மன்), 2. சோணையன், 3. தொட்டிச்சி, 4.சங்கிலியான், 5. முப்பிலியான், 6. மாயாண்டித்தெய்வம், 7.அண்ணன் (பெரிய கருப்பர்)** ஆகிய முக்கியமாகக் கொண்டாடுகிற ஏழு தெய்வங்களின் பெயர்களையும் வரிசையாகக் கூப்பிட்டு அதற்குரிய ஆயுதங்களையும் எடுத்து கேட்கின்ற கேள்விகளுக்குச் சொல்லும் விபூதி பிடித்துக் கட்டிக் கொண்டு கேள்வி சொல்வது மிகவும் உறுதியானது களரி கண்டு அலங்காரமாகவும். துடியாகவும் அருள் பொங்கிச் சுரந்து சுவாமி வரும்போது சாமியாடியய்யா ஆணி பாதக் கொரடுக் கட்டையிலும், கூர்மையான அரிவாள் மீது ஏறி நின்றும் கேள்விகள் அமோகமாகவும் வெகு சிறப்பாகவும் சொல்லும்.

அச்சய சித்திரை மீ வந்த படைப்பில் புள்ளி காளாஞ்சித் தேங்காய் உடைத்ததில், உள்ளிருக்கும் பருப்பு தனித்தனியே நான்கு சமபாகங்களாகத் தேங்காய்மூடியில் ஒட்டாமல் இருந்தது. இதனைப் படைப்புக்கு வந்திருந்த நகரத்தார்களும், ஊர்மக்களும் ஏனையோரும் நேரே பார்த்தனர். அச்சமும் வியப்பும் அடைந்தனர். கலங்கிய மனதுடன் பெரிய சாமியாடி ராமன் செட்டி ராமனாத ஐயாவைச் சாமி அழைத்துக் கேட்டபோது இதனால் தனக்குத் தீங்கு வருமென்றும் எல்லோரும் சுபிட்சமாக வாழ்வார்கள் என்று கூறினார்கள். அதன்படி

சாமியாடி ஒரு சில மாதத்தில் காலமாகி விட்டார். அதனால் இடைக்காலத்தில் படைப்பு இல்லாதிருந்தது. சில ஆண்டுகளுக்குப் பின் பிரமோதூதி ஷை சாமியாடி மகன் கருப்பையா ஐயா அவர்களைப் பெரிய சாமியாடியாகவும், குமரப்பய்யா மகன் கருப்பன் செட்டியய்யாவைக் சின்னச்சாமியாடியாகவும், வேகுப்பட்டி ஆண்டியப்ப செட்டி குமரப்ப அய்யா பூசாரியாகவும், வேகுப்பட்டி குமரப்ப அய்யா மகன் கருப்பாத்தான் மனைவி உமையாள் ஆச்சி ஆச்சியம்மன் பானை வைத்தும் கோயில் வீட்டுப் படைப்பு நடந்து வருகிறது. இவ்வாறு நடந்து வரும் காலத்தில் பூசாரி ஆண்டியப்ப செட்டி குமரப்பய்யா காலமாகி சுமார் 23 வருஷகாலமாகப் படைப்பு இல்லாதிருந்தது. பிறகு செவ்வூர் பழ.முரு.முருகப்ப செட்டியர் தலைமையில் செவ்வூர் சோணையன் கோயில் படைப்பு விஷயமாய் மன்மத ஆனி மீ 2உ 16.6.1955இல் கூட்டம் கூடி சோணையன் கோயில் படைப்புக் காரியங்களை கவனிப்பதற்கும் நிர்வாகம் செய்வதற்கும் செவ்வூர் பழ.கரு.பழனியப்ப செட்டியாரை காரியக்காரராக (டிரஸ்டியாக) நியமித்து ஏற்பாடு செய்து துன்முகி சித்திரை மீ 20உக்கு 9-5-56க்கு படைப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆவணி மாதத்தை விடச் சித்திரை மாதமே சிறப்பானது எனக் கண்டு சித்திரை மாதத்திலேயே தொடர்ந்து படைப்பு நடத்தி வருகிறார்கள்.

ஷை துன்முகி வருஷப் படைப்பில் செவ்வூர் இராமநாத ஐயா மகன் கருப்பையா ஐயா அவர்களைப் பெரிய சாமியாடியாகவும், பூலாங்குறிச்சி பழநியப்ப செட்டி பெரியண ஐயாவைச் சின்னச் சாமியாடியாகவும், பூலாங்குறிச்சி பழநியப்ப செட்டி சுப்பையா ஐயாவைப் பூசாரியாகவும் நியமித்து, வேகுப்பட்டி கரு.பெரி.பெரியணன் செட்டியார் மனைவி சிகப்பி ஆச்சி, ஆச்சியம்மன் பானை வைத்து சோணையன் கோவில் படைப்பும் செவ்வூர் புதூரில் வருஷாவருஷம் நடந்து வரும் காலத்தில் விகாரி (1958) சின்னச்சாமியாடி பூலாங்குறிச்சி பழநியப்ப செட்டி பெரியண ஐயாவுக்குப் பிறகு, இடைக்காலம் இரண்டு வருஷம் படைப்பு இல்லாமலிருந்து பிலவஸ்ரீ சித்திரை மீ 23உ(9.5.1961) படைப்பில் சின்னச் சாமியாடி இல்லாமலே படைப்பும் சிறப்பாக நடந்திருக்கிறது.

24.5.1961இல் செவ்வூர் பெரி.பழ.பழநியப்ப செட்டியாரைச் சோணையன் கோயில் காரியக்காரராக நியமித்து இரண்டு படைப்புகள் 1963,1965இல் நடத்தி வரும்காலத்தில் மறுவருஷத்தில் பானைவைக்க வேகுப்பட்டி கரு.பெரி.பெரியணன் செட்டியார் மனைவி சிகப்பி ஆச்சி காலமாகிவிட்டப்படியால் பிலவங்க ஸ்ரீ

சித்திரை மீ 30உ (9.5.1967) படைப்பில் ஆச்சியம்மன் பானையைப் பூசாரியே வைத்துப் படைப்பு நடத்தியிருக்கிறார்கள்.

நடப்பு வருஷத்தில் செவ்வூர் பழ கரு சொக்கலிங்கம் செட்டியாரைக் காரியக்காரராக நியமித்துத் தொடர்ந்து இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை படைப்பும் நல்லபடியாக நடந்து கொண்டு வருகிறது.

செவ்வூர், வேகுப்பட்டி, பூலாங்குறிச்சி, மிதிலைப்பட்டி, நெற்குப்பை, பனையப்பட்டி ஆகிய ஊர்களில் இருக்கும் சோணையன் கோவிலைச் சேர்ந்த நகரத்தார்கள் ஒன்று சேர்ந்து செவ்வூரில் கூடி ஆரம்ப காலத்தில் வருஷந்தோறும் சித்திரை மாதத்தில் வரும் கடைசி வெள்ளிக்கிழமைக்கு முந்தைய வெள்ளிக்கிழமை புள்ளிடாப்பு எழுதுகிறது. புள்ளிடாப்பு எழுதுவதிலிருந்து படைப்புக் காரியங்கள் தொடங்குவதால் அது முதல் படைப்புப் பூர்த்தியாகிற வரைக்கும் இதில் சேர்ந்த நகரத்தார்கள் ஊரில் நடக்கின்ற தீமைகள் எதிலும் கலந்து கொள்வதில்லை.

சித்திரை மாதம் கடைசி வெள்ளிக்கிழமையன்று இரவு நெற்குப்பை சோணையன் கோயிலுக்கு ஏற்கெனவே உள்ள ஓலைச்சுவடியில் கண்டுள்ள விவரப்படி பொருட்களைச் சேகரம் செய்து கொண்டுபோய் ‘பெரும் பூஜை‘ போட்டு சுவாமி தரிசனம் செய்து கொண்டு பிரசாதம் வாங்கி வருகிறது.

மறுநாள் சனிக்கிழமை இந்த கோயிலைச் சேர்ந்த நகரத்தார்களிடம் புள்ளிவரி அரிசி முதலியவற்றை வசூல் செய்கிறது. அன்று எண்ணெய் தேய்த்துக் குளித்து இரவில் பூசாரி விநாயகப் பானை வைத்து சமையல் ஆரம்பித்து வந்துள்ள எல்லோருக்கும் சாப்பாடு செய்து வைக்கிறது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலையில் **‘ஆச்சியம்மன் பொங்கல் பானை’** வைப்பது படைப்பின் சிறப்புமிக்க மெய்சிலிர்க்கும் முக்கிய அம்சமாகும். பின்னர் பிறந்த மக்கள் (பெண்பிள்ளைகள்) பணியார மாவிடித்துத் தயாரித்துக் கொடுக்க அதைக் கோயில் புள்ளிகாரப் பெண்கள் நெய் ஊற்றிப் பணியாரத்தை வேகவைத்து எடுக்கிறது. பெட்டைக்கோழி, ஒன்று, முட்டை ஐந்து சமைத்து, கத்தரிக்காய் முருங்கைக்காய் அவியலுடன் பருப்பும்மசித்து, பூசாரி –

தெய்வங்களுக்குப் படைப்பதற்காக தானே ஊற்றி எடுத்த பணியாரங்களையும் பள்ளயத்தில் வைக்கிறது.

**1 கீழ்புறம்**

மாயாண்டித் தெய்வம், சந்நியாசித்
தெய்வம், அரசுமகன்தெய்வம்
மூன்று பேருக்கும்

மூன்று பள்ளயம் போட்டு, அதற்கு ப.அரிசி பெ படி 1 பருப்பு, வாழைக்காய், கத்தரிப்பிஞ்சு சமைத்து வைத்து – தயிர், பாணக்கம் பணியாரம், பலாப்பழம், வாழைப்பழம், தேன், தேங்காய், தினைமா, மாவிளக்கு, முதலியனவும் வைத்து முதலில் தீபம் பார்க்கிறது. பிறகு கீழ்க்கண்ட விவரப்படி பள்ளயம் படைக்கிறது.

**2 அதற்கு மேற்கு**

கருப்பையா சுவாமிக்குப் படைக்கும்
பள்ளயத்தில்
பாலும் பழமும் கரைத்து வைத்தும்

**3 அதற்கு மேற்கு**

ஆச்சியம்மனுக்குப் படைக்கும்
பள்ளயத்தில்
கோழிமுட்டை, கருவாடு, முருங்கக்காய், கத்திரிப் பிஞ்சு, பெருங்காயம் முதலியன வைத்தும்.

**4 அதற்கு மேற்கு**

செட்டியாருக்குப் படைக்கும் பள்ளயம்
போட்டும்

**5 அதற்கு மேற்கு**

கைம்பெண்சாதி ஆச்சிக்குப் படைக்கும் பள்ளயம்
போட்டும்

**6 அதற்கு மேற்கு**

தொட்டிச்சிக்குப் பள்ளயமும்

## 7 அதற்கு மேற்கு

சோணையனுக்குத் தீர்த்தம் வைத்து
தீபாராதனை பார்த்து, சுவாமி தெரிசனம்
செய்து கொள்கிறது.

மறுநாள் திங்கட்கிழமை காலையில் 9 மணிக்கு மேல் பள்ளயங்களைப் பிரித்து அரண்மணைக்கு (கவிராயர் வீட்டுக்கு) காளாஞ்சி கொடுத்த, அடுத்த இரணிக்கோயில் நகரத்தார்களுக்குக் காளாஞ்சி கொடுத்து, புள்ளிக்காரர்களும் காளாஞ்சி வாங்கிக்கொண்டு பிறந்த மக்கள், விருந்தினர்களுக்கும் காளாஞ்சி கொடுக்கிறது.

காளாஞ்சி வாங்கிக் கொண்டு புள்ளிக்காரர்கள் அனைவரும் சன்னிதானத்தில் மாவிளக்கு வைத்து, அர்ச்சனை செய்து வழிபாடு செய்து கொள்கிறது. பிறகு படைப்பு வீட்டிலுள்ள பூஜை சாமான்களை ஏலம் போடுகிறது. மக்கள் பலர் ஏலப்பொருட்களை மனமுவந்து போட்டியிட்டு ஏலம் கேட்கிறார்கள். ஏலம் எடுத்தவர்கள் மக்கட்பேறு பெற்றும், செல்வச்சிறப்பு எய்தியும், உடல் நலம் அடைந்தும் மிக்க இன்பமுடன் இருந்து வருகிறார்கள்.

அன்று (திங்கட்கிழமை) மதிய உணவுக்கு ஆட்டுமாமிசம் சமைத்துப் பள்ளயத்துடன் எல்லோருக்கும் சாப்பாடு செய்வித்துப் படைப்பைப் பூர்த்தி செய்து கொள்கிறது.

படைப்புப் பூர்த்தியான மறு வெள்ளிகிழமை (வைகாசி மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை)யில் ‘இளம் படைப்பு’ சின்னச் சேக்கான் செட்டி வகையறா வேகுப்பாட்டில் நடத்தி வந்ததைத் தற்சமயம் செவ்வூர் படைப்பு வீட்டில் நடத்தி வருகிறார்கள்.

இவ்வாறு சோணையன் கோயில் படைப்பு முதலில் ஆண்டுக்கொரு முறையும், தற்சமயம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையும் தொடர்ந்து மிகச் சிறப்பாக நடந்து கொண்டு வருகிறது. இவர்களின் வழித்தோன்றல்கள் மொத்தம் புள்ளிகள் 1956ஆம் ஆண்டு 151 புள்ளிகளும் 1978ஆம் ஆண்டு 262 புள்ளிகளாகவும் பெருகி இருந்து வருகிறார்கள்.

நாளது ரௌத்திரி வருஷம் சித்திரை மாதம் 20உக்கு 2-5-1980 வெள்ளிக்கிழமை செவ்வூரில் புள்ளிடாப்பு எழுதுகிறதென்றும் நாளது சித்திரை 27உ வெள்ளிக்கிழமை 9-5-80இல் பெரும் பூஜை போட்டு மறுநாள் சோயையன் கோயில் வீட்டில் படைப்பு நடத்துகிறதென்றும் கூடிப்பேசி முடிவு செய்து வேலைகள் நடந்து வருகிறது.

இவ்வண்ணம் சோணையன் கோயில் நகரத்தார்கள் ஒன்றுசேர்ந்து படைப்பு விவரத்தில் குறிப்பிட்டுள்ளபடி படைப்புப் பல படைத்து சுவாமி தெரிசனம் செய்து பல்கிப் பெருகி வாழ எல்லாம் வல்ல இறையருள் முன்னிற்பதாக.

**எவ்வூரும் செவ்வூரு செல்லும் வண்ணம்**
**இணையில்லா சோணையா படையல் தன்னை**
**செவ்வூரில் கூட்டுகின்ற நகரத்தாா்கள்**
**செழித்துமிக என்றென்றும் ஜெகத்தில் வாழ்க!**

**சுபம் சுபம் சுபம்**

உ

## சோணையன் கோவில்

| **ஊர்** | **ஆண்டு** | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1956 | 1958 | 1961 | 1963 | 1965 | 1967 | 1971 | 1973 | 1976 | 1978 | 1980 |
| செவ்வூர் | 85 | 102 | 105 | 103 | 106 | 109 | 113 | 121 | 128 | 131 | 136 |
| வேகுப்பட்டி | 28 | 40 | 50 | 52 | 52 | 55 | 63 | 64 | 64 | 65 | 64 |
| பூலாங்குறிச்சி | 26 | 31 | 32 | 33 | 34 | 38 | 42 | 45 | 47 | 49 | 49 |
| நெற்குப்பை | 3 | 4 | 2 | 1 | 3 | 3 | 4 | 4 | 4 | 4 | 4 |
| மிதிலைப்பட்டி | 6 | 9 | 8 | 8 | 8 | 8 | 8 | 9 | 10 | 10 | 10 |
| பனையப்பட்டி | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 |
| **கூடுதல்** | **151** | **189** | **200** | **200** | **206** | **216** | **233** | **246** | **256** | **262** | **266** |

உ

சிவமயம்

# வாரும் சோணை அய்யனே

வாரும் சோணை அய்யனே
எனக்கு வரம் தாரும் சோணை அய்யனே
வடக்கே வடதேசம்
வந்திருந்தாய் கெங்கையோரம்
எடுத்தாய் சிறைதனிலே
சினமுடன் தொட்டிச்சியை

(வாரும் சோணை அய்யனே)

பட்டாணிராவுத்தனை வெட்டவென்று கம்பளத்தார்
பாங்குடனேபின் தொடர்ந்து ஒங்கும் ஓமக்காட்டினிலே

(வாரும் சோணை அய்யனே)

சித்திரை மாதமதில் செவ்வூர்தன வணிகர்
பக்தியுடனே உனை எத்தினமும் போற்றிடுவார்
ஆற்றங்கரைதனிலே அமர்ந்து இருப்பவனே
போற்றி அடிபணிந்தேன் - பொன்னடிக் கமலமய்யா
வாரும் சோணை அய்யனே
எனக்கு வரம் தாரும்சோணை அய்யனே

பாடியவர் : செவ்வூர் **கவிராயர்**